கட்ட வேண்டும் என்று சொல்லி, ரூ. 12,500க்கு கட்டடம் கட்டப்பட்டது. இப்படி சில டெக்னிக்கல் பிரச்சனைகள் ஆங்காங்கு ஏற்பட்டுவிடுகின்றன. தேவைக்கேற்ப எந்த எந்த அளவு முடியுமோ அந்தந்த அளவு, உடன டிப் பலன் தரத்தக்க அளவில் பரிசீலிக்கப்படவேண்டும் என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அதுவும் வாய்மொழியாக. தேவைக்கேற்ப செயல்படுத்தலாம்.

கோடாறங்குளம் மருத்துவ விடுதி.

*வினா 270 : திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகுமக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் பகுதியில் உள்ள கோடாறங்குளம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மருத்துவ விடுதி மாற்றப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) கோடாறங்குளத்திலுள்ள மருத்துவ விடுதி ஒரு வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்தது. பிரம்மதேசத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ், ஒரு புதிய கட்டிடம் கட்டப்பட்டது. ஆதலால் அம்பா சமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானத்தின்படி கோடாறங்குளத்தில் இயங்கி வந்த மருத்துவ குழந்தை நல விடுதியை பிரம்ம தேசத்தில் புதிதாகக் கட்டிய கட்டிடத்திற்கு அரசு ஆணையைப் பெற்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அங்கு நல்ல முறையில் நடைபெற்றுவந்த மருத்துவ விடுதி எந்த அடிப்படையில் மாற்றப்பட்டது? மாற்ற வேண்டிய காரணங்கள் என்ன? மாற்றப்பட வேண்டியதற்குத் தகுந்த காரணம் எதும் காட்டாமல் மாற்றியுள்ளதால் அதை மீண்டும் அரசு பரிசீலனை செய்து, கோடாறங்குளத்திற்கே அந்த மருத்துவ விடுதியை மீண்டும் ஆரம்பிக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று கோடாறங்குளத்தில் சப்-சென்டர் நடத்துவதற்கு அரசின் அனுமதியைப் பெறக்கூடிய வாய்ப்பு அந்த ஒன்றியத்தில் இல்லை. மொத்தம் எவ்வளவு சப்-சென்டர்கள் இருக்க வேண்டுமோ அதைவிட ஒன்று அதிகமாக கோடாறங்குளத்தில் வைக்கப்பட்டி ருக்கிறது. அதற்கு மூன்றில் இரண்டு பகுதி அரசாங்க உதவி மானியம் வழங்கக்கூடிய வாய்ப்பு இல்லை, என்று ஆடிட் அப்ஜெக்ஷனில் தெரி விக்கப்பட்டது. அந்த நிலையில் அது இயங்குவதை அங்கே கைவிட்டுவிட்டு,

மறுபடியும் ஐந்தாண்டுகள் கழித்து, மக்கட்தொகை அதிகரிப்பு ஏற்பட்ட அடிப்படையில் 4,728 பேரைக் கொண்டிருக்கும் பிரம்மதேசப் பகுதியில் நாங்கள் நடத்த முடியும். கோடாறங்குளத்தில் 1,768 பேர்தான் இருக்கிறார்கள்—அந்த வட்டாரத்தில் அமைக்கும்போது பத்தாயிரம் பேருக்கு ஒன்று என்ற முறையில் அதிக மக்கள் தொகை அமையும் என்று சொல்லி, 18—1—1972 அன்று பஞ்சாயத்து ஒன்றியத்தில் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டு அந்த ஒன்றியத் தீர்மானம் அரசுக்கு அனுப்பப்பட்டு, அப்படி அனுப்பப்பட்ட அடிப்படையில் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. கோடாறங்குளத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கியது. பிரம்ம தேசத்தில் இப்பொழுது கட்டடம் கட்டப்பட்டு, அதில் இயங்கி வருகிறது. கோடாறங்குளத்தில் இயங்கினால் அரசாங்கத்தின் உதவித்தொகை கிடைப்பதற்கில்லை என்று ஆடிட் அப்ஜெக்ஷன் தெரிவித்தது. பிரம்மதேசத்தில் நடத்துவதற்கு அனுமதி கேட்கப்பட்டது. அதற்குரிய காரணம் காட்டப் பட்டது. ஒன்றியம் தீர்மானித்தது. எனவே, "நன்றாக இயங்கிற்று அல்லவா?" என்ற கேள்வி எழவில்லை.

Modern Mortuaries

* 271 *Q.*—THIRU *N. K. PALANISWAMY*: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up modern mortuaries in the Government Hospitals in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: விவர அறிக்கை@ ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இந்த நவீன சவக்கிடங்குகளை தாலூக்காக்கள் அளவில் கூட வைத்திருப்பதன் காரணம் என்ன என்று தெரியவில்லை. இதற்காக உயர்ந்த அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப் படுகிறார்கள். அரை உயிரோடு இருக்கிறவர்களை எல்லாம் கூட அங்கே இழுத்துக்கொண்டு போய் போடுவதற்கு இதுபோல இதை அதிகப்படியாகச் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் இருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சவத்திற்கு கூட உயிர் வந்துவிடுகிறது என்று சொல்லலாம் என்றாலும் அரை உயிரோடு இருப்பவர்களை எல்லாம் சவக்கிடங்குகளில்

@104—107-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.